2014 ஆகஸ்ட் 5] [திரு. இரா. காமராஜ்]

அதன்மூலமாகவும் நுகர்வோரின் நலன் பாதுகாக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கருவிலும், சிசு பருவத்திலும்கூட இழப்பு ஏற்படக்கூடாது என, தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்தார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலங்களோடு ஒப்பிடுகிறபோது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த இந்த மூன்றாண்டுகளில் இறப்பு சதவிகிதம் மிகவும் குறைந்திருக்கிறது. அந்த அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். யாராவது ஒருவர் கேளுங்கள். உங்கள் கட்சியிலேயே நான்கு பேர் எழுந்து நின்றால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–20

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய சில பிரச்சினைகள், பதற்றம் ஆகியவற்றை அவசரப் பொது முக்கியத்துவம் கருதி, அரசுக்கு கவன ஈர்ப்பின் மூலமாக நாங்கள் கொண்டு வருகிறோம். அந்த வகையில் வறட்சியின் காரணமாக காய்கறிகளின் உற்பத்தி என்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்ன விஷயம்? (குறுக்கீடு)*

சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உட்காருங்கள். நீங்கள் கேட்கிற விஷயம் என்னவென்று தெரிகிறது; அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய ஆய்வில் இருக்கிறது. கவன ஈர்ப்பு எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் சொல்கிறேன். உட்காருங்கள். காலையில் இதுகுறித்து உங்களிடம் சொல்லிவிட்டேன். பிறகு, மீண்டும் அவையில் இதுகுறித்து raise பண்ணுகிறீர்கள். நான் என்ன செய்வது? இதுகுறித்து நீங்கள் என் அறைக்கு வந்து கேட்டபோது, நான் விளக்கமாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இதுகுறித்து நான் உங்களுக்கு விளக்கமாகச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், சொல்லுங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை நிரம்பிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உங்களுக்குப் பேச நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் குறிப்பிடும் பொருள் குறித்த விவரம் எனக்குத் தெரிகிறது. என் அறையில் காலையில் நீங்கள் இதுகுறித்து கேட்டபோது, நான் விளக்கம் சொல்லிவிட்டேன், பிறகு, மீண்டும் அவையில் இதுகுறித்து raise பண்ணுகிறீர்கள், (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை நிரம்பிக் கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் 90 அடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, விவசாயத்திற்கு அணையிலிருந்து நீர் எப்போது திறந்துவிடப்படும் என்பதை அறிய, கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன விஷயம், சொல்லுங்கள்.

2014 ஆகஸ்ட் 5]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஏறக்குறைய 50-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளை நான் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் நீங்கள் கூற முடியாது. துறையிலிருந்து விளக்கம் வந்தவுடன், ஒவ்வொன்றாக நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு காலையிலேயே பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் காலையில் என் அறையில் வந்து இதுகுறித்து கேட்டபோது, உங்களுக்கு விளக்கம் சொல்லிவிட்டேன். மீண்டும், வேண்டுமென்றே, தேவையில்லாமல், அவையில் raise பண்ணுவது முறையல்ல. ஒவ்வொரு கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) துறைகளிலிருந்து விளக்கங்கள் கிடைக்கப்பெற்றவுடன், ஒவ்வொரு கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றே, பிரச்சினை பண்ணுவதற்காக கேட்டால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.